★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆவணி 5உ திங்கள் (20—8—56) ★ ★ வெளியூர் : ஆவணி 6உ செவ்வாய் (21—8—56) [இதழ் 60

விசித்திரமே விசித்திரம்!

எம். கே. பாவுன்னிப் பிள்ளை என்பார், திரு-கொச்சி மாநில சர்க்காரில் ஒரு கால்நடை மருத்துவ அதிகாரி! அவர் நெடுநாளாக நோயுற்று வருந்தியிருக்கிறார்; நோய் தீராததால் மேலும் சில காலத்திற்குத் தமக்கு 'லீவ்' அனுமதி தரப்பட வேண்டுமென மனுச் செய்துகொண்டார். பாவம்! 'லீவு'க்கு அனுமதி கோரிய அவர், அவ்வனுமதி கிடைக்குமுன்னர் இவ்வுலகைவிட்டுப் பிரிந்துவிட்டார்! என்றாலும், சர்க்கார் விட்டபாடில்லை! அவருக்கு எப்படியேனும் 'லீவு' அனுமதித்துவிடுவது என்ற 'உறுதி'யுடன் அவர் இறந்த பின்னரும்கூட, சர்க்கார் 'கெசட்' பிரசுரத்தில், 'அவருக்கு இன்னும் அதிக நாட்களுக்கு லீவ் அனுமதிக்கப்பட்டிருக்கிறது' என்று வெளியிட்டிருக்கிறது!

'அகிம்சா மூர்த்தி'களின் திருவிளையாடல்!

அகமதாபாத் சம்பவங்களில் 'டம் டம்' குண்டுகள் உபயோகிக்கப்பட்டன?

சிதறிய மண்டையோடுகளைக் காட்டி மக்கள் சபை உறுப்பினர் எச். வி. காமத் சந்தேகம் கிளப்புகிறார்

பம்பாய், ஆக 19—

அகமதாபாத் துப்பாக்கிப் பிரயோகச் சம்பவங்களின் போது, கொடிய வேகமும், சித்திரவதை செய்து கொல்லும் குணமும் கொண்ட 'டம்டம்' குண்டுகள் உபயோகிக்கப்பட்டனவா என்ற சந்தேகம் தோன்றியிருப்பதாக மக்கள் சபை உறுப்பினரான தோழர் எச். வி. காமத் கூறியிருக்கிறார்.

குண்டுகள் துளைத்துச் சிதறச்செய்த மண்டையோடு ஒன்றின் புகைப்படத்தைப் பத்திரிகையாளரிடம் காட்டி அவர், 'இதுபோன்ற காயங்களை டம்டம் குண்டுகளால்தான் உண்டு பண்ண முடியும்' என்று சந்தேகிக்க இடமிருப்பதாக அவர் கூறியிருக்கிறார்.

இருமொழி மாநிலம் அமைப்பது என்ற முடிவுக்கு வருமுன் குசராத் மக்களைக் கேட்காததின் எதிரொலியே அகமதாபாத் சம்பவங்களுக்குக் காரணமாகும் என்றும், குசராத் மக்கள் தங்களுக்கு மொழிவழி மாநிலம் வேண்டுமென எதிர்பார்த்து வந்தனர் என்றும், தாங்கள் நம்பி வந்த காங்கிரஸ் தலைவர்கள் தங்களுக்கு துரோகமிழைத்து விட்டதையுணர்ந்த அவர்கள் கிளர்ந்தெழுந்துள்ளனர் என்றும் காமத் குறிப்பிட்டிருக்கிறார்.

64,000 ஆசிரியருக்கு சம்பள உயர்வு?

பாட்னா, ஆக. 18—

பீகார் மாநில சர்க்கார், மாநிலத்திலுள்ள 64,000 ஆரம்ப, நடுத்தரப் பள்ளி ஆசிரியர்களின் அடிப்படை ஊதியத்தை உயர்த்துவதென முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

ஏழை மக்கள் தங்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்ள உதவி அளிப்பதையே சர்க்கார் தீவிரமாகக் கவனித்து வருகிறதென்று, சட்டசபையில் அமைச்சர் பக்தவத்சலம் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறியிருக்கிறார்.

வேலையிழந்த தொழிலாளர்களின் உண்ணாவிரதம்!

தற்கொலை செய்துகொள்ள முயற்சித்ததாகக் கைது!

கல்கத்தா, ஆக. 18—

தற்கொலை செய்துகொள்ள முயற்சி செய்தார்கள் என்று குற்றஞ் சாட்டப்பட்டு, தாமோதர் பள்ளத்தாக்குத் திட்ட வேலையிலிருந்து நீக்கப்பட்டு உண்ணாவிரதம் இருந்துவரும் 5 தொழிலாளர்கள் போலீசாரால் கைது செய்யப்பட்டு, மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனராம்.

தங்களை வேலையிலிருந்து நீக்கியதை எதிர்த்து அந்த ஐந்து தொழிலாளர்களும் கடந்த ஆக. 15-ந் தேதிமுதல் தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டக் கார்ப்பொரேஷன் தலைவருடைய அலுவலகத்தின்முன் உண்ணாவிரதம் இருந்து வந்திருக்கின்றனர்.

1,500 ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

போனஸ் கோரி நடவடிக்கை

திருச்சூர், ஆக. 19—

1955-ம் ஆண்டிற்கான 'போனஸ்' கோரியும், மற்றும் தங்கள் வேலைகள் குறித்துச் சில வசதிகளும் செய்துதர வேண்டுமென்று கூறி, திருச்சூருக்கு அருகிலுள்ள கோரட்டி எனுமிடத்திலுள்ள ஜமுனா நூல் ஆலைத் தொழிலாளர்கள் சுமார் 1,500 பேர் கடந்த 16-ந்தேதி முதல், காலவரையறையின்றிப் பொதுவேலை நிறுத்தம் மேற்கொண்டிருக்கின்றனர்.

இந்த ஆலை, மாநிலத்திலுள்ள வெளிநாட்டு மூலதனத்தில் நடைபெறும் முக்கிய ஆலைகளுள் ஒன்றாகும்.

வேலை நிறுத்தம் செய்வதென முடிவெடுத்த தொழிலாளர்கள் அனைவரும் ஆலையின் முன் கூடி நின்று, ஆலைக்குள் வேலைக்குச் செல்வோரைத் தடுத்து நிறுத்த முனைந்திருப்பதாயும், அவ்வாறு தடங்கல்கள் செய்துகொண்டிருந்த கூட்டத்தினரைப் போலீசார் மிகக் கஷ்டத்துடன் அப்புறப்படுத்தினர் என்றும், மேலும் ஏதேனும் நேரிட்டால் உடனடி தேவைக்கென அங்கு ரிசர்வ் போலீசார் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

இதற்கிடையில் உதவித் தொழில் கமிஷனர், தொழிலாளர் —நிர்வாகப் பிரதிநிதிகளிடையே பேச்சு வார்த்தைகள் நடத்தி—அதன் மூலம் ஒப்பந்தம் செய்து கொண்டு, இந்தச் சிக்கலுக்குச் சமுகமான பரிகாரம்காண முயற்சித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புதிய முதன் மந்திரி பதவி ஏற்றார்

மைசூர் மாநிலத்தின் புதிய முதன் மந்திரியாக கே. மஞ்சப்பா ஞாயிறன்று காலை பதவி ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

1,10,000 கையெழுத்துக்களடங்கிய மகஜர்

மாநிலங்கள் சபைத் தலைவரிடம் தரப்படும்

'நீதிபூர்வமான விசாரணை நடத்துக'

மராட்டிய பிரதேச பி. சோ. கட்சி நிர்வாகக் குழு, இருமொழி பம்பாய் மாநில அமைப்பை எதிர்த்தும், அகமதாபாத் துப்பாக்கிப் பிரயோகங்களைக் கண்டித்தும், அவை குறித்து நீதிபூர்வமான விசாரணை நடத்தக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளது.

இருமொழி பம்பாய் அமைப்பை எதிர்த்து அலகாபாத்தில் பரிபூரண அர்த்தால்

அகமதாபாத், ஆக. 19—

அகமதாபாத் நகரில் ஞாயிறன்று முழுதும் அர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டிருக்கிறது.

வழக்கமாக மூன்று மணி நேரம் மட்டுமே திறந்திருக்கக்கூடிய சிறு கடைகள்கூட, மக்கள் தங்களின் அன்றாடத் தேவைகளை வாங்கிக்கொள்ள முடியாத வகையில் மூடப்பட்டுவிட்டன.

மக்கள் தாங்களாகவே ஊரடங்குச் சட்டத்தை அமுல் செய்யும் வகையில், கருப்புச் சின்னங்கள் அணிந்த தொண்டர்கள், மக்கள் எவரும் வீட்டைவிட்டு வெளிவர வேண்டாமெனக் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

நகர மக்கள் குழு ஒன்று வழங்கிய அனுமதிச் சீட்டுக்கள் வைத்திருப்பவர்களும், தனிப்பட்டவர் வண்டிகளும் மட்டுமே வீதிகளில்

(4-ம் பக்கம் பார்க்க)

காங்கிரசார்மீது குசராத் மக்கள் தாக்குதல்

இருமொழி பம்பாய் அமைப்பை ஏற்றதின் எதிரொலி

அகமதாபாத், ஆக. 19—

பம்பாய் இருமொழி மாநில அமைப்பை குஜராத் பிரதேசக் காங்கிரஸ் ஏற்றுக்கொண்டதும், காங்கிரஸ் கட்சி அலுவலகத்தின் முன் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள், அக்கட்டடத்தின்மீது பலமான 'கல்வீச்சுப் பிரயோகத்'தில் ஈடுபட்டிருக்கின்றனர்!

பலத்த கல்வீச்சுக்களின் விளைவாகக் கட்டடத்தின் உள்ளிருந்த காங்கிரஸ் ஊழியர் ஒருவர் பலத்த காயம்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

மேலும், கட்டடத்தினின்றும் கூட்டம் முடிவுற்று வெளிவந்துகொண்டிருந்த பிரதேசக் காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்கள் பலரைப் பிடித்து அடித்தும் இருக்கின்றனர்.

அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் யு. என். தேபர் அவர்கள் கூட்டத்தினரை அணுகி, அவர்கள் சமாதான முறையில் நடந்துகொள்ளுமாறு கேட்டுக்கொண்டபோது, ஒரு கூட்டத்தார் அவரைச் சூழ்ந்துகொண்டு, அவர் தலையிலணிந்து கொண்டிருந்த தலைப்பாகையைக் கழற்றி எறிந்திருக்கின்றனர்.

மேலும், குசராத் பிரதேசக் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவரின் மோட்டார் கார் பலத்தச் சேதத்திற்குள்ளாக்கப்பட்டதாம்.

அன்று இரவு நகரிலுள்ள ஒரு பகுதியான அசார்வா எனும் இடத்தில் தீக்கொளுத்தப்பட்டதாகவும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

அங்குள்ள ஒரு மருத்துவ மனைக்கு அருகிலுள்ள முனிசிபல் பஸ் நிலையத்தை, ஒரு பெருங்கூட்டத்தவர் சூழ்ந்து தீக்கிரையாக்கினர் என்று போலீஸ் தகவல் ஒன்று தரப்பட்டுள்ளதாம்.

பெரிய பம்பாய் இருமொழி மாநில அமைப்பை எதிர்த்துத் தங்கள் கண்டனத்தைத் தெரிவிப்பதற்கென இங்குள்ள காங்கிரஸ் அலுவலகக் கட்டடத்திற்கு முன் உண்ணாவிரதம் இருந்த 48 சத்தியாக்கிரகிகள் அடங்கிய கூட்டத்தைப் போலீசார் அப்படியே கைது செய்து சிறைவைத்திருக்கின்றனர் என்றும், அந்தக் கூட்டத்தை மகேந்திர தேசாய் என்பார் தலைமை தாங்கி நடத்திச் சென்றார் என்றும் கூறப்படுகிறது.

காங்கிரஸ் கலகலக்கிறது

இருமொழி பம்பாய்க்கு எதிர்ப்பு வலுக்கிறது

25 வழக்கறிஞர்கள் காங்கிரசிற்கு முழுக்கு

பரோடா, ஆக. 18—

இருமொழி பம்பாய் மாநிலம் அமைப்பது என்ற முடிவு மேற்கொள்ளப்பட்ட முறைக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் கோத்ரா நகர காங்கிரசைச் சேர்ந்த 11 உறுப்பினர்களும், தலைவரும், பரோடா நகர காங்கிரசைச் சேர்ந்த 25 வழக்கறிஞர்களும் தாங்கள் காங்கிரசிலிருந்து விலகிக்கொள்வதாக அறிவித்திருக்கின்றனராம்.

இந்த முடிவைத் தெரிவித்த அவர்கள், குசராத் மக்கள் பலாத்காரத்தில் ஈடுபடக் கூடாதெனவும், தங்கள் கோரிக்கைக்காக அமைதியான வழிகளில் போராட வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

பரோடா வழக்கறிஞர்கள் அகமதாபாத் துப்பாக்கிப் பிரயோகங்களை வன்மையாகக் கண்டித்திருப்பதுடன் குசராத்திற்குத் தனி மாநிலம் வேண்டுமெனவும் கோரியுள்ளனர்.

நிராகரிப்பு!

பம்பாய், ஆக. 2—

நேற்றிரவு நடைபெற்ற சம்யுக்த மகாராட்டிர சமிதிக் கூட்டத்தில் பெரிய இருமொழி பம்பாய் மாநில அமைப்பை நிராகரித்து ஒரு மனதாகத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

அத்தீர்மானத்தின் மூலம் பம்பாய் நகரைத் தலைநகராகக் கொண்ட சம்யுக்த மராட்டிர மாநிலம் அமைக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

நம் நாடு

சென்னை 20-8-'56 திங்கள்

மாமியார் நியாயம்!

தான் உடைத்தால் மண் குடம்; தனது மருமகள் உடைத்தால் பொற்குடம் எனும் பழமொழி ஒன்று தமிழ் உலகில் வழங்கிவருகிறது. தனக்குள்ள உரிமை மற்றவர்களுக்குக் கிடையாது எனக் கொண்டு செயல்படும் கயவர்களின் மனப்பண்பை விளக்கும் கருத்திலேயே அப்பழமொழி எழலாயிற்று. இப்பழமொழிக்குச் சிறந்ததோர் எடுத்துக் காட்டாகத்தான் மொழித் துறையில், வடநாட்டு இந்தி வெறியர்கள் நடந்துவரும் முறை அமைந்து கிடக்கிறது.

இந்தியத் துணைக்கண்டத்தின் தேசிய மொழிகளென மொத்தத்தில் பதினன்கு மொழிகளை இந்திய அரசியல் சட்டம் ஒப்புக்கொண்டு இருக்கிறது. ஒப்புக்கொண்டபடி பதினன்குமொழிகளின்வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் ஒத்தத் தன்மையில் இந்தியப் பேரரசு செயல்பட முயற்சிக்க வேண்டும். அச்செயல்தான் பாராட்டுக்குரியதுமாகும்.

பதினன்கு மொழிகளின் ஆக்கத்திற்கும், ஒரு மொழிக்கும் மற்ருெரு மொழிக்கும் பாரபட்சம் காட்டாமல், ஒத்தத் தன்மையில் இந்தியப் பேரரசு நடவடிக்கை மேற்கொள்ளுகிறதானன்ருல், திட்ட—மாக இல்லை என்றுதான் கூற வேண்டியதாக இருக்கிறது. இந்தி மொழியின் ஏற்றத்திற்கு இந்தியப் பேரரசு காட்டிவரும் ஆர்வமும் எடுத்துக்கொண்டுவரும் அதிதீவிர ஏற்பாடும், மற்ற மொழிகளின் வகையில் மேற்கொள்ளவில்லை என்றுதான் குற்றஞ்சுமத்த வேண்டியதாகிறது.

தனது ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்ற ஒரு காரணத்தினுலேயே தனது அதிகார பலத்தையும் தனது வரைகடந்த பண பலத்தையும் இந்தி மொழியின் விரிவுக்கும் வளர்ச்சிக்கும் இந்தியப் பேரரசு துணிந்து செலவிட்டுவருகிறது. மற்ற மொழியினரின் அதிருப்திக்கும் ஆத்திரத்திற்கும் ஆளாகக்கூடாது என்ற எண்ணத்தின் விளைவாகவே, மற்ற மொழிகளின் ஏற்றத்துக்கும், இந்தியப் பேரரசு ஏதோ வேண்டா வெறுப்பாகக் கொஞ்சம் செலவிட்டுவருகிறது என்றுதான் கூறவேண்டும்.

இந்தி மொழியை வளமுள்ளதாக ஆக்குவதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சி போன்றே, செத்த வடமொழியின் வளர்ச்சிக்கும் இந்தியப் பேரரசு தீவிரமாகப் பாடுபடுகிறது. மேற்குறிப்பிட்ட இரு மொழிகளின் வளர்ச்சியை மட்டுமே தனது பொறுப்பாகக் கொண்டு இந்தியப் பேரரசு பாடுபடுவதைக் கண்டால், மற்ற மொழிகளின் வாழ்விலும் சாவிலும் அதற்குக் கடுகத்தனை கவலையும் அறவே கிடையாது என்றே நாம் முடிவுகட்ட வேண்டியவர்களாகிறேம்.

அரசியல் சட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள பதினன்கு மொழிகளுள், இந்தி மொழியைவிட இலக்கியவளத்தில் சிறந்து விளங்கும் தலைசிறந்த மொழியாகத் தமிழ்மொழி இருந்து வருகிறது. வங்கமும் குஜராத்தியும், இந்தியின் வரட்சியைக் கேலிசெய்யும் வகையில் வனப்பும் பொலிவும் உடைய மொழிகளாக உள்ளன. ஆந்திரமும், கன்னடமும், கருத்தை விளக்குவதில் இந்தியைத் தோற்கடிக்கக் கூடியவைகளேயாகும். இந்தியைவிட, மேற்குறிப்பிட்ட மொழிகள் அனைத்தும் எல்லாவகையிலும்உயர்வுடையனவாகஇருந்தபோதிலும்அவைகள் தற்காலத் தேவைகளை நிரப்பக்கூடிய மொழிகளாக ஆக்குவதில் இந்தியப் பேரரசிற்குக் கருத்தே கிடையாது. ஆனல், அவ்வகையில் இந்தியைப் பக்குவப்படுத்துவதில் அதற்கு மட்டிலடங்காத ஆசை இருக்கிறது.

தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொள்பவர்கள், அம்மொழியின் வளர்ச்சியை விரும்பினுல்—உயர்வைக்கோரினுல், அதை மொழிப்பற்று எனக் கொள்வதற்குப் பதிலாக மொழிவெறி எனக் கூசாது கூற இந்தி வெறியர்கள் முன் வந்து விடுகின்றனர். ஆனுல், அதனினும் தீவிரமான தன்மையில் பிறமொழிகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு, தம் தாய்மொழியான இந்தி மொழிக்கு மட்டும் ஆக்கமும் ஏற்றமும் தேட வடநாட்டு இந்திவெறியர்கள் முன் வருவதை, மொழிவெறி அல்ல-மொழிப்பற்று எனச் சிறப்பித்துப் பாராட்டிக் கூறிக்கொள்ளுகின்றனர்.

தமிழ் வளர்ச்சிக்கு முயற்சிப்போரை மொழிவெறியர் எனத் தவருக வசைபாடுவதுடனும் நின்றுவிடாது, அத்தூயப் பணியை, இந்தியத் துணைக்கண்டத்தின் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் அழிவுப் பணி எனப் பழிக்கும் அளவிற்கும் இந்திவெறியர்கள் சென்றுள்ளனர். ஆனல், அவ்வாறு பழிக்கும் அவர்களோ, தங்கள் தாய்மொழியான வளமற்ற இந்தி மொழியை ஆங்கிலத்திற்குச் சமமாக ஆக்க முயற்சிப்பதுடன், மற்ற மொழிகளுக்கு உரிய இடங்களிலும் ஆதிக்கம் பெற்று, மற்ற மொழிகளைச் சீரழிக்கவும் மேற்கொண்டொழுகி வருகின்றனர். அப்போக்கை, இந்தியத் துணைக் கண்டத்தின் ஒற்றுமையைக் கட்டிக் காக்கும் அரும்பணி எனவும் பேசுகின்றனர்.

ஏதோ பொருந்தா ஒன்றைப் புகலாகக் கூறிக்கொண்டு, தங்கள் தாய்மொழியைப் பிறர் மீது சுமத்தவும், அவ்வாறு சுமத்துவதின் மூலம் மற்ற மொழிகளின் அழிவுக்கு வழி செய்யவும், வடநாட்டு இந்தி மொழி வெறியர்கள் முயற்சிப்பது, உயர்ந்த மொழிப்பற்ரும்!

பொருத்தமான காரணங்களை எடுத்துக்காட்டி, இந்தி மொழியின் ஆதிக்கத்திலிருந்து தங்கள் தாய்மொழியைப் பாதுகாத்து வளர்க்க தமிழ் மொழியினர் முன்வருவது—வாதிடுவது மொழிவெறியாம்!

வடநாட்டு இந்திவெறியர்களின் மாமியார் நியாயமே நியாயம்!

வறண்ட பாலைவனத்தை வளமாக்க வடநாட்டில் திட்டம்!

நீரற்றபகுதிகள் 'நெற்களஞ்சிய'மாக உருமாறுகின்றன!

பஞ்சமும் பட்டினியும் உருவெடுத்து நிற்கும் மாநிலம் செழுமையுறும்

1,000 மைல் நீளத்திற்குக் கால்வாய்கள்;
30-இலட்சம் ஏகர் நிலத்திற்குப் பாசனவசதி

மூன்று மாநிலங்களின் கூட்டு முயற்சி

'ஐந்தாண்டுத் திட்டங்களில் தென்னுடு புறக்கணிக்கப்படுகிறது' என்று நாம் பன்முறை எழுதியும் பேசியும் வருகிறேம். 'தென்னகத்து மக்கள் வேலையின்றித் தவிக்கிருர்கள்—உண்ண உணவும், உடுத்த உடையுமின்றி வாடுகிருர்கள்; வேலையின்றித் தவிக்கும் எங்களுக்கு வேலை வாய்ப்பளிக்கத் தொழிற்சாலைகள் கட்டித்தரக் கூடாதா? தேவையான பயிர் நிலங்கள் இருந்தாலும் நீர் இல்லாமல் அவதிப்படுவதைத் தடுக்க பெரிய அணைத்திட்டங்கள்—கால்வாய்த் திட்டங்கள் மேற்கொள்ளக் கூடாதா?' என்று கேட்கிறேம். இதற்கெல்லாம் டில்லிதரும் பதில், 'இங்கு சாதன வசதிகள் இல்லை; எனவே முடியவில்லை'—என்பதுதான்.

இராஜஸ்தான் மாநிலம், இந்தியாவிலேயே மிகுந்த வரண்ட பாலைவனப்பகுதி; அங்கும்தான் சாதன வசதிகள் இல்லை; என்ருலும்கூட அம்மாநிலத்தில் 1000 மைல் நீளத்திற்குக் கால்வாய்கள் வெட்டி அப்பகுதியைச் செழிப்பாக்க வடநாட்டுச் சர்க்கார் எவ்வளவு தீவிரமும் ஆர்வமும் காட்டுகிறது—வறண்ட பாலைவனத்தை வளங்கொழிக்கும் பகுதியாக மாற்ற அந்தச் சர்க்கார் எந்த அளவு ஆர்வம் கொண்டிருக்கிறது என்பதைக் கீழே தரப்பட்டுள்ள விவரம் மெய்ப்பிக்கிறது:—

பக்ரா அணைக்கட்டிலிருந்து, பாத்ரா, நோகர், சூரத்கார், அனுமன்கார், செய்சிங்நகர், பதம்பூர், கங்காநகர் ஆகிய இந்தியாவிலேயே மிகப் பெரும்பான்மையான பாலைவனப் பகுதிகளுக்கு நீர்ப்பாசனம் கொண்டுசெல்ல சுமார் 1,000 மைல் நீளத்திற்கு, சிறு கால்வாய்களும் பெரிய கால்வாய்களும் வெட்டப்பட்டிருக்கின்றன.

இராஜஸ்தான் மாநிலத்தில், வேறு இரண்டு பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களும், மற்றும் பல நடுத்தர—சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களும்இருந்தபோதிலும்மாநிலத்திலுள்ள தண்ணீரற்ற — பாலைவனப் பகுதிகளை நீர்வளப் பகுதிகளாக மாற்றுவதில் இந்தக் கால்வாய்கள் முக்கியத்துவம் பெறுகின்றனவாம்.

இந்தப் பகுதிகளிலுள்ளநிலமெல்லாம் மணல் பரப்பாகவும் இருக்கவில்லையாம். பஞ்சாபை அடுத்துள்ள பகுதிகளெல்லாம் ஐந்து நதிகள் பாய்கின்ற பஞ்சாபிலுள்ள நிலத்தைப் போலவே செழுமை வாய்ந்தவையாக இருக்கின்றனவாம்.

இப்போது கங்கைக் கால்வாய் இந்தப் பகுதிகளின் தென் கோடியில் பயன்படுவதுபோல், இப்பகுதிகளிலுள்ள மணல்பரப்பைக் கட்டுப்படுத்திவிட்டுப் பின்னர், இங்கு தொடர்ச்சியான கால்வாய்ப் பாசனம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பஞ்சாபுடனும்—பெப்சுவுடனும் இந்தக் கூட்டுத் திட்ட வேலைகளில் 15 சதவிகிதம் பங்கு பெறும் இராஜஸ்தான், வருகிற 1957—58-க்குள் தன்னுடைய பகுதி வேலைகளை முடித்துவிடும் என்று தெரிகிறது. என்ருலும், 1959—60-ல் பக்ரா அணைக்கட்டுத் திட்டம் முடிவுற்ற பின்னரே இக்கால்வாய் நீர்ப்பாசனம் நடைபெற வாய்ப்பு இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

இமயமலையிலிருந்து துவங்கி கீழே இறங்கும் சட்லஜ் நதியின் குறுக்கேதான், பஞ்சாப் மாநில சர்க்கார், 700 அடி உயரத்திற்கு இந்த அணையைக் கட்டுகின்றனா. இந்த நீர்ப்பாசன — மின்சார அணைக்கட்டுத் திட்டம் மேற்படி 3 மாநிலங்களிலுமாக ஏகதேசம் 35 இலட்சம் ஏகர் நிலத்திற்குப் பாசன வசதியளிப்பதுடன், பெரும் அளவு மின்சார உற்பத்திக்கும் வழிகோலும்.

இராஜஸ்தானுக்குச் சேரவேண்டிய தண்ணீர், மாநிலத்திலுள்ள முக்கிய 5 இடங்களில் பிரிக்கப்பட்டுத் தரப்படும் என்றும், அவைகளின் மூலம் இராஜஸ்தான் மாநிலத்தில் கங்கா நகர் மாவட்டத்தில் மட்டும் 5,70,000 ஏகர் நிலம் பாசன வசதி பெறுமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

வெப்ப நாட்களில், மேற்படி கால்வாய்களில் விடப்படும் தண்ணீர் குறைந்து போகாமலிருப்பதற்கான பாதுகாப்பு ஏற்பாடாக, அந்தக் கால்வாய்களின் முக்கியக் கிளைகள் அனைத்தும் செங்கற்களினுல் மூடப்பட்டு தளவரிசை கட்டப்படுகிறது.

இராஜஸ்தான் மாநிலத்தின் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், கட்டிடங்கள், பாலங்கள் போன்ற வேலைகளுக்கான செலவு மதிப்பீடு 4.64 கோடி ரூபாயாகும். இத்தொகையில் இந்த வகைகளில் கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூ. 3,50,00,000 செலவிடப்பட்டுவிட்டது. 1954—55ல் துவக்கப்பட்டு முடிக்கப்பட்ட கால்வாய்களின் மூலம் ஏற்கனவே 45,000 ஏகர் நிலம் பாசன வசதி பெற்றுவிட்டது. கடந்த ஆண்டில் மேலும் 1.40 இலட்சம் ஏகர் நிலத்திற்குப் பாசன வசதி கிடைத்தது.

பக்ரா அணைக்கட்டிலிருந்து இராஜஸ்தான் தன்னுடைய முழுப் பங்கு நீரையும் பெறும்போது, பஞ்சமும் பட்டினியுமே உருவெடுதது நிற்கும் அந்த மாநிலம், தன்னை வளம் கொழிக்கும் ஒரு பகுதியாக மாற்றிக் கொள்ள அதிகக் காலம் ஒன்றும் தேவையில்லை.

டந்கத 30 ஆண்டுகளில் இதே பகுதிகளைச் சேர்ந்த கங்கைக் கால்வாய் காலனியின் அபிவிருத்தியைக் கவனிக்கும் போது, இந்தப் பகுதிகளும், வருங்காலத்தில் பலவகையான வியாபாரத் துறைகளை மேற்கொண்டு 'மண்டி'கள் அமைத்துத் தன்னை எப்படி வளப்படுத்திக்கொள்ளும் என்பதைக் காண முடியும்.

ரேடியோ சக்தியால் இயங்கும் விமானம்

கட்டுக்கடங்காமல் பறந்ததால் ஏற்பட்ட விளைவு

பாம்டேல் (கலிபோர்னியா) ஆக 17—

கடந்த வியாழனன்று, லாஸ் ஏஞ்சலிஸில், ரேடியோ சக்தியால் இயங்கும் ஆளில்லா விமானம் ஒன்று கட்டுக்கடங்காமல் இரண்டு மணிநேரமாக நகரைச் சுற்றிச் சுற்றி வந்திருக்கிறது.

பல அமெரிக்க விமானப்படைகள் அந்தக் 'கட்டுக்கடங்காத' விமானத்தைச் சுட்டு வீழ்த்த முயற்சி செய்தும் பலனளிக்கவில்லையாம். ஆனல், அந்த விமானத்தை வீழ்த்துவதற்காகச் சென்ற மற்ற விமானங்கள் போட்ட குண்டுகள் தவறி, மூன்று கிராமங்களில் வீழ்ந்து சிறு சிறு சேதங்களை ஏற்படுத்தியுள்ளனவாம்; நல்ல வேளையாக அதிகமான அளவில் சேதங்களோ மற்றும் விபத்துக்களோ எதுவும் நிகழவில்லை என்றும், ஒரு பெண்மணியும் அவரது குழந்தைகளும் ஏறிச் சென்ற கார் ஒன்றின் டையர் வெடித்துவிட்டது என்றும், மலைப் பகுதிகளில் சிறு தீ கிளம்பிற்று என்றும் கூறப்படுகிறது

இறுதியில், அந்த விமானம், பெட்ரோல் தீர்ந்தானவுடன் மேலும் ஓடமுடியாமல் பாம்லண்ட் எனும் இடத்திற்கருகிலுள்ள பாலைவனப் பகுதியில் விழுந்து நொறுங்குண்டதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

இனி இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்படுமாம்

இதுவரையில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வந்ததும், இரயில்களிலுள்ள மின்சார உற்பத்திக்குப் பயன்பட்டு வருவதுமான 'டைனமோ'க்கள், இனி இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்படுமெனத் தெரிகிறது.

இவற்றை உற்பத்தி செய்ய ஓர் இந்திய நிறுவனத்துக்கு 'லைசென்ஸ்' தரலாமென இரயில்வே போர்டு சிபாரிசு செய்துள்ளதாம். ஆண்டிற்குச் சுமார் 900 முதல் 1,000 'டைனமோ'க்கள் இந்திய இரயில்வேக்களுக்குத் தேவைப்படுகிறதாம்.

2,770 ஓராசிரியர் பள்ளிகள்

சென்னை மாநிலம் முழுமையிலும் திறக்கப்பட்டுள்ளனவாம்

சென்னை, ஆக. 20—

"படித்து வேலையில்லாமலிருப்போருக்கு வேலை வாய்ப்பளிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் இந்திய சர்க்காரால் கொண்டுவரப்பட்ட திட்டத்தையொட்டி, சென்னை மாநிலம் முழுமையிலுமாகக் கடந்த 1954—55-ம் ஆண்டுக் காலத்தில், 2,770 ஓராசிரியர் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன." என்று, மாநில கல்வித்துறை நிர்வாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

துவக்கப் பள்ளிகளின் எண்ணிக்கையும்கூட இந்த இடைக்காலத்தில் 22,347-லிருந்து 25,507 ஆகவும், அப்பள்ளிகளில் கல்வி கற்கக் குழந்தைகளின் எண்ணிக்கையும் 30,32,490 லிருந்து 31,93,705-ஆக அதிகரித்தது என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

1953—54-ம் ஆண்டு இறுதியில், மாநில முழுமையிலும் 905 ஆதாரப் பள்ளிகள்தான் இருந்திருக்கின்றன; ஆனுல், இத்திட்ட அமுலுக்குப் பின்னா அவ்வெண்ணிக்கை 1,075-ஆக உயர்ந்திருப்பதாகவும், ஆதாரப் பயிற்சிப் பள்ளிகளின் எண்ணிக்கையும் 42-லிருந்து 47-ஆக அதிகரித்துள்ளதாகவும் தெரி

(4-ம் பக்கம் பார்க்க)

நாட்டின் அபிவிருத்திக்கு எல்லைப் பிரச்சினைகள் ஊறு தேடுமாம்!

எல்லைக் குழு அமைக்காததற்குக் காரணம் மத்திய அமைச்சர் விளக்கம்

புதுடில்லி, ஆக. 18—

"நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு எல்லைத் தகராறுகள் போன்ற 'பேய்'கள் ஊறுதேடிவிடக்கூடாது என்பதற்காகவே சர்க்கார், எல்லைக் குழுக்கள் அமைப்பது நல்லதல்ல என்று கருதுகிறது,"

என்று, அமைச்சர் தத்தார், டில்லி மாநிலங்கள் சபையில், எல்லைக் குழுக்கள் 'அமைக்கப்படாததற்குக் காரணம் காட்டியிருக்கிறார்!

'மக்கள் சபையில் விவாதிக்கப்பட்டு முடிவுற்ற மாநில புனரமைப்பு மசோதா மாநிலங்கள் சபையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்' என்ற கோரிக்கையை வெளியிட்டுப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

"மாநிலங்கள் எல்லாம் திருத்தி அமைக்கப்பட்டான பிறகு, வட்டாரக் குழுக்கள் வேலை செய்யத் தொடங்கும்; அப்போது அந்த வட்டாரக் குழுக்கள், எல்லைத் தகராறுகள் போன்ற பிரச்சினைகளில் தலையிட்டு முடிவு கூறும்; இதனிடையில், புதிய மாநிலங்கள் அனைத்தும் தங்களிடையே உள்ள எல்லைத் தகராறுகள் குறித்து விவாதித்து ஒரு உடன்பாட்டிற்கு வருவது வரவேற்கத் தக்கதே,"

என்றும் அமைச்சர் தத்தார் குறிப்பிட்டிருக்கிறார்.

பம்பாயைப் பொறுத்தவரையில், அதனுடைய குழப்பங்களுக்கெல்லாம் சுமுகமான—திருப்திகரமான ஒரு முடிவை மக்கள்சபை மேற்கொண்டுவிட்டிருக்கிறது என்றும், சர்க்காரின் அந்த முடிவுக்கு மக்கள் சபையில் அதிகப்படியான பெரும்பான்மை ஆதரவு கிடைத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

சமபந்தி விருந்துண்ண தலைவர்களுக்கு அழைப்பு

அகில இலங்கை திரிகோணமலை அருந்ததியர் சங்கக்கிளை முடிவு

12-8-56-ல், பெரியகடை பாரதி வாசகசாலையில், அகில இலங்கை அருந்ததியர் சங்க திரிகோணமலை கிளையின் செயற் குழுக் கூட்டம் திரு. எம். சாத்தையா தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சீ. க பிச்சை, பி. குப்பையாண்டி, எஸ். கிருஷ்ணன், இலங்கோ ஆகியோர் பேசினர். இறுதியில், சமபந்தி விருந்துண்ணும் வைபவத்திற்கு, திரிகோணமலைக்கு வருகை தரும் தமிழ்த் தலைவர்கள் அனைவரையும் கலந்துகொள்ள அழைப்பதெனவும், விழாவிற்கு, அந்தப் பகுதி பாராளுமன்றப் பிரதிநிதியைத் தலைமை வகிக்குமாறு கேட்டுக்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

பிறப்பு

சென்னை 14-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர் தோழர் எஸ். குருசாமி அவர்களின் துணைவியார் 7-8-56-ல் ஓர் பெண் மகவுக்குத் தாயாரானார்; அதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

குன்னத்தூர் தி. மு கழகத் தோழர் க. அன்பரசு அவர்களின் துணைவியார் 4—8—56ல் ஒரு ஆண் மகவுக்குத் தாயானார்; தாயும் சேயும் நலம்.

பெயர் சூட்டல்

10—8—56ல் புளியங்குடி தோழர் பி. எ. கெங்காதரன் அவர்களின் ஆண் மகவுக்குத் தோழர் ஈ வெ கி சம்பத் அவர்கள் முன்னிலையில் 'சம்பத்' என்று பெயரிடப்பட்டது. தோழர்கள் சம்பத், எஸ். முத்து மற்றுமுள்ள தோழர்களுக்கும் தோழர் கெங்காதரன் தேனீர் விருந்து நடத்தினர். இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது. வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

மறைவு

வில்லோனி எஸ்டேட் 1-வது வட்டத் தி மு. கழகச் செயலாளர் தோழர் பி எ. வேல்சாமி அவர்களின் துணைவியார் பச்சையம்மாள் 12—8—56ல் இயற்கையெய்தினர் என்ற செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

கடலில் பெருங்காயம் கரைப்பது போன்றதே டில்லியின் முயற்சி!

புதுடில்லி, ஆக. 18—

இரண்டாம் திட்ட காலத்தில் ஒவ்வொரு மாநிலத்திலும் சுமார் 100 பிச்சைக்காரர்கள் தங்குவதற்குரிய விடுதி ஒன்று அமைக்க வேண்டுமென டில்லி உத்திரவிட்டிருப்பதாக மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இது, பிச்சை எடுப்பதை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

இந்த விடுதிகள் அமைப்பதற்கான செலவுகளில் பாதியை டில்லி சர்க்கார் ஏற்றுக்கொள்ளும் எனறும், இந்தத் திட்டம் பற்றிய மாநிலங்களுடைய கருத்து எதிர்பார்க்கப்படுகிறது என்றும் மந்திரி கூறியிருக்கிறார்.

'வரதட்சிணை'யை ஒழிக்க

100 கல்லூரி மாணவர் உறுதிமொழி

மாணவி ஒருவரின் தீவிரம்

கத்தியவார், ஆக. 18—

இங்குள்ள டி. எஸ். கல்லூரியைச் சேர்ந்த சுமார் 100 மாணவர்கள், தங்கள் திருமணத்தின்போது எந்தவித 'வரதட்சிணை'யும் வாங்கிக் கொள்வதில்லை என்று முடிவு செய்திருக்கின்றனராம்.

அத்துடன், வரதட்சணை போன்ற ஏதாவது ஒரு ஏற்பாட்டை தங்கள் மூத்தோர் திணிப்பார்களேயானால், அதை எதிர்ப்பது எனவும் அவர்கள் முடிவு செய்திருக்கின்றனராம்.

'மத்திய பாரத் சேவக் சமாஜ'த்தின் தகவல் அறிவிப்புக் கிளைச் செயலாளரான ஆர். என். சௌத்ரி என்பார், 'வரதட்சிணை, மிக ஒழுக்கக்கேடான ஒரு பழக்கம்; சமூகத்தின் சாபத்தீடு' என்று கூறி, 'இந்தத் தீய பழக்கத்தை ஒழிக்க இளைஞர் முன்வர வேண்டும்' எனக் கேட்டுக்கொண்டதற்கு இணங்கவே, கல்லூரியைச் சேர்ந்த 100 மாணவர்களும் உறுதிமொழி எடுத்துக்கொண்டனராம். மீரட் கல்லூரி மாணவி ஒருவரும் 'வரதட்சிணை' கோரும் எந்த ஒரு நபரையும் மணப்பதில்லை என்று உறுதி பூண்டிருப்பதாயும், மேலும், ஆண்கள்—பெண்கள் இருசாராரிடமுமாக சுமார் 1,000 பேரிடம் வரதட்சிணையை ஒழிப்போம என்று எழுத்துமூலம் உறுதிமொழி வாங்காமல் திருமணம் செய்துகொள்வதில்லை என்றும் உறுதி பூண்டிருப்பதாயும், இதுவரை அந்தப் பெண்மணி 400 கையெழுத்துக்கள்வரை வாங்கி விட்டதாகவும் சௌத்ரி தெரிவித்திருக்கிறார்.

ஆசிரியருக்குக் கடிதம்

அறந்தாங்கி தாலுகா புயல் நிவாரணக் கடன்

ஐயா,

1955-ம் ஆண்டு நவம்பரில் வீசிய புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கோடிக்கணக்கான ரூபாய் சர்க்கார் உதவியளிக்க முன்வந்ததுமன்றி, பல கொள்ளைகளுக்கும் ஊழல்களுக்கும் இடங்கொடுத்து விட்டது. அவ்வப்போது தாலுகா புயல் நிவாரணக் குழுவாலும் சர்வகட்சிக் கூட்டணியாராலும் இதுபற்றிகோரிலும், தீர்மானங்கள் மூலமும், பொதுக்கூட்டங்கள் வாயிலாகவும் சர்க்காருக்கு தெரிவிக்கப்பட்டிருந்தும், யாவும் அலட்சியஞ் செய்யப்பட்டுவிட்டன. இதனால் மக்களிடையே மனவேதனையும் மரண வேதனையும் உண்டாகிவிட்டது.

கஞ்சித் தொட்டிகள், துணிகள் மற்றும் இனும் பொருள்கள் வழங்குவதில் பதுக்கல், கொள்ளை, வியாபாரம் முதலிய அநீதிகள் பெரிதும் நடந்துவிட்டன. 30 ரூபாய்க்குக் குறைவான 'கிஸ்தி' செலுத்தும் விவசாயிகளுக்குக் கிடைக்கவேண்டிய இனும் உரம், விதை வகைகள் பெரும்பகுதி பெரும் விவசாயிகளுக்குக் கிடைத்திருக்கிறது.

சேதமடைந்த வீடுகளுக்கு ரூ 30 வரை இனும் வழங்கப்பட்டபோது, சர்க்கார் உத்தரவாதத்தையும் உறுதியையும் அடிக்கடி மாற்றிக்கொண்டே நடந்ததினால், பல மக்கள் ஏமாற்றப்பட்டனர். சேதமடைந்த கூரை வீடுகளுக்கு மாத்திரம் இனும் கொடுப்பதாக முதலில் சொல்லி, பின், ஓட்டு வீடு, மாடி வீடு, காலி வீடு, காணுத வீடு இவைகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனால் முதலில் தள்ளப்பட்டவர்கள் கடைசிவரை கவனிக்கப்படவில்லை. கடன் வாங்கிக் கொள்ள விருப்பமுடையோருக்கு இனும் தொகை இல்லையென்று தெரிவிக்கப்பட்டதினால் பலர் இனும் பெறவில்லை. பின்னர் இனும் பெற்றவர்களுக்கும் சர்க்கார் கடன் சலுகை காட்டியது. இது வரவேற்கப்படுவதாயினும், பலர் ஏமாற்றப்பட்டு விட்டார்கள் என்பது கவனிக்கத்தக்கது. பின், கடன் கொடுக்கப்படும் காலத்திலாவது இனும் வேண்டாமென்று கடனை நம்பியிருந்தவர்களுக்கு முதற் சலுகை காட்டப்பட்டதென்றால் அதுவுமில்லை. சிறிதளவு செல்வாக்கும் வசதி பெற்றவர்களுக்கும் அதிகாரிகளின் அன்பைப் பெற்றவர்களுக்கும் கோரிய கடன்தொகைகள் கிட்டி இருக்கின்றன. மற்றவர்கள் மனமொடிந்து வாழவேண்டிய நிலையை சர்க்கார் இன்று உண்டாக்கி விட்டது. 30—4—56க்கு முந்திய கடன் விண்ணப்பங்கள் யாவும் கவனிக்கப்படும் என்ற சர்க்காரின் உத்தரவைக் கண்டு பொறுமையோடு நம்பிக்கை வைத்திருந்த பல ஏழை மக்கள் வாயில், இன்று மண்ணை யள்ளிப் போட்டுவிட்டது சர்க்கார். இடைச் செருகலாக வந்த விண்ணப்பங்களுக்கும் ஏற்கனவே வந்த விண்ணப்பங்களின் தொகையையும் சரிவர பரிசீலனை செய்யாமல், அதிகாரிகள் தமது இஷ்டம்போல் கண்மூடித்தனமாய் தொகைகளைக் கொடுத்துவிட்டு, இன்று பல மக்களைத் திண்டாட வைத்துவிட்டார்கள். வேதனை தாங்காமல் பலர் தவிக்கிறார்கள்; ஏக்கத்தினால் மரணங்கள் ஏற்படினும் விந்தையல்ல.

சர்க்கார் திடீரென்று கடன் தொகைகளைக் குறைத்துக் கொடுத்தும், ஞாபகமின்றிப் பார்த்தும் பார்க்காமலும் பல மனுக்களைத் தள்ளுபடி செய்துவிடுகிறார்கள். அதிலும் ரூ 500-ல் 2/3 பாகம் தான் கொடுப்பதுமாயிருந்துவருகிறது. ஆனால் ஜாமீன் சொத்தை மாத்திரம் குறைத்துக்கொள்ள அக்கரை காட்டவில்லை. கடன் தொகை ரூபாய் 500–க்கு மேல் கொடுக்க முடியாதென்று சர்க்கார் அதிகாரிகள் உத்திரவுபோட்டு, மனுக்களைக் கவனிப்பதைவிட்டு, விண்ணப்பதாரர்களைக் குறைந்த தொகையைப் பெற்றுக்கொள்ள சம்மதமென கையெழுத்து வாங்குவது சரியே. ஆனால் தொகையை குறைத்துப்பெற சம்மதமென்று வற்புறுத்திக் கையெழுத்து வாங்குவது ஏன்? கடன் வேண்டாமென்று சிலரிடம் ஏமாற்றியும் கையெழுத்து வாங்கப்படுவது நியாயமில்லை. இந்தக் கொடுமையை அகற்றி எல்லா விண்ணப்பதாரர்களுக்கும் உடனடியாக ஏற்ற தொகை கிடைக்கும்படி சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கனவே கேட்ட கடன் தொகைகள் வழங்கப்பட்டு வந்திருந்து, இப்பொழுது இப்படிச் செய்வது நியாயமாவென்று உயர்தர அதிகாரிகளை வினவியபோது, முதலில் பெற்றுக்கொள்ள உங்களிடத்தில் சமர்த்து இல்லை' என்று வாய்கூசாமல் சொல்லுகிறார்கள் தீயவழியில் புக மக்களை வேண்டுமென்றே அதிகாரிகள் தூண்டுகிறார்கள்.

பல்லாண்டுகள் பஞ்சத்தாலும், அடுத்தடுத்து இரு புயலாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சரியான நிவாரணம் கொடுக்கப்படவேண்டியதவசியம்.

சர்க்காரிடமிருந்து கடன் தொகை கிடைத்துவிடலாமென்று நம்பி, பிறரிடம் கடன் வாங்கி வீடுகளைப் பழுதுபார்த்த மனுதாரர்களின் வீடுகள், சேதமில்லையென, மேற்படியார்கள் கடன் மனுவை அதிகாரிகள் அர்த்தமற்ற முறையில் தள்ளுபடிசெய்து வருவது பெரிதும் கண்டிக்கத்தக்கது. ஏற்கனவே இனும் வழங்கிய அதிகாரிகள் சேதத்தைப் பொருட்படுத்தியே இனும் வழங்கி இருக்கிறார்கள்; இப்பொழுதுள்ள அதிகாரிகள் சேதமில்லையென்று தள்ளுபடி செய்வதற்கு யாதொரு காரணமுமில்லை.

இவ்விஷயங்களை சென்னை சர்க்கார் உடனடியாகக் கவனித்து, தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளக் கோருகிறேன்.

எஸ். இராமசாமி
ஆவணத்தான்கோட்டை.

பிரிட்டிஷ் குடிமக்களாகவே இருக்க விரும்பும் இலங்கையர்!

மலாக்கா, ஆக. 18—

மலாயா கூட்டாட்சியில் இருந்துவரும் பெரும்பான்மையான இலங்கையர், அந்நாட்டிற்குச் சுதந்திரம் கிடைத்தான பின்னரும் கூடத் தாங்கள் பிரிட்டிஷ் குடிமக்களாகவே இருக்க விரும்புகின்றனராம்!

இந்தத் தகவலடங்கிய ஒரு குறிப்பொன்று, மலாக்கா இலங்கையர் சங்க உறுப்பினர் ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

மலேயாவிலுள்ள முக்கியமான நகர்களில் வாழும் இலங்கையரின் கையெழுத்துக்களடங்கிய இந்தக் குறிப்பில், 'புதிய அரசியல் அமைப்பில் சுதந்திரம் கிடைத்த பின்னர் அங்கு வாழும் பிரிட்டிஷ் குடிமக்களின் நிலைமை மற்ற மலேயா குடிமக்களின் நிலையைப் போன்று சரிசமமாகவும் ஒன்றாகவும் இருக்க வேண்டும்' என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறதாம்.

பனம்பாக்கம் பிர்க்கா விவசாயிகள் முன்னேற்ற சங்கம்

5—8—56 மாலை 6 மணிக்கு, திருமால்பூர் கிராமத்தில் பனம்பாக்கம் பிர்க்கா விவசாயிகள் முன்னேற்றச் சங்கத்தை தோழர் சி பி. சிற்றரசு அவர்கள் தோழர் கே. எம். இராமலிங்கம் தலைமையில் துவக்கிவைத்துச் சொற்பொழிவாற்றினர். பிர்க்காவைச் சேர்ந்த பல ஊர்களினின்றும், ஏராளமான விவசாயப் பெருமக்கள் கலந்து கொண்டனர். சங்கத்தின் தற்காலிகச் செயலாளராகத் தோழர் ச. குமாரசாமி இருந்துவருவதென முடிவு செய்யப்பட்டது. தோழர் சி. பி. சிற்றரசு அவர்களுக்கு திருமால்பூர் தி. மு. கழகச் சார்பில் கைத்தறி ஆடை அணிவிக்கப்பட்டது.

கோவை அழகிரி சொற்பயிற்சி மன்றம்

12—8—56 காலை 10 மணிக்கு, தோழர் சாகுல்அமீது தலைமையில் நடைபெற்ற சொற்பயிற்சிக் கூட்டத்தில், 'விடுதலைக் கிளர்ச்சி' என்னும் பொருள் குறித்துத் தோழர்கள் எம். கே. சாமி, கு. பா. சு. மணி, கு. ப. செ. நாதன், அங்குதாசு, அசலம், இராமநாதன், சின்னசாமி ஆகியோர் பேசினா.

ஆலங்குடி கடைநிலை ஊழியர்கள் சங்கம்

உபகிளை துவக்க விழா

12—8—56 மாலை 4 மணிக்கு ஆலங்குடி தாலுகா, சென்னை அரசாங்கக் கடைநிலை ஊழியர்கள் சங்க உபகிளை துவக்க விழா திரு. கே. கணபதி தலைமையில் நடைபெற்றது. 'சங்க ஒற்றுமை' பற்றி திருவாளர்கள் நாகராசன், சுப்பராசு, பி. மாரிமுத்து, எம் ஐ நூர் முகமது, உ. சையது முகம்மது ஆகியோர் பேசினர். பின்னர் சங்க நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை தமிழாசிரியர் கழகம்

12—8—56 மாலை 4½ மணிக்கு, சென்னைத் தமிழாசிரியர் கழகச் சார்பில், பச்சையப்பன் கல்லூரிப் பள்ளியில் பேராசிரியர் மயிலை-சிவ. முத்து தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் தம்முடைய முன்னுரையில், பேராசிரியர் நடேசன் அவர்கள் இறந்தது குறித்து அனுதாபம் தெரிவித்தும், பேராசிரியர் மே. வி. வேணுகோபால், புலவர் எஸ். எஸ். அருணகிரிநாதர் ஆகிய இருவர்கட்கு அண்மையில் மணிவிழா நடத்தவதைப் பற்றியும், தமிழாசிரியர்களுக்குத் துணைபுரியும் தகுதி வாய்ந்தவருக்கே வருகின்ற தேர்தலில் வாக்களிப்பது குறித்தும் பேசினர். பின்னர் தோழியர் கிருஷ்ணவேணி அம்மையார், திரு. எஸ். எஸ். அருணகிரிநாதர், அழகுவேலனார், இராமகிருஷ்ணன் முதலியோரும் பேசினர்.

திருவனந்தபுரம் தி. மு. க. மாணவர் கிளை

12—8—56 காலை 10 மணிக்கு, திருவனந்தபுரம் தி. மு. க. மாணவர் கிளையின் புது உறுப்பினர் கூட்டத்தில் தேர்தல் நடைபெறறது. தோழர்கள் பி. பத்மனுபன் வே. இராமச்சந்திரன் (திருமாறன்), இரா. செயராம், பி. பாலகிருட்டிணன், எல். பகவதிப் பெருமாள் ஆகியோர் முறையே செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளர், செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சேவூர் (வ. ஆ.) அழகிரி மன்றம்

6—8—56 இரவு 8-15 மணிக்கு அழகிரி மன்றத்தில் ஏ. இராதாகிருட்டிணன் தலைமையில் நடைபெற்ற சொற்பயிற்சிக் கூட்டத்தில், 'விடுதலை' என்பது பற்றி தோழர்கள் எம். ஏ. செயராமன், எஸ். ஜி. கோபால், எஸ். ஏ. கைலாசன், மு. சோமசுந்தரன், போ. ந. செயராமன், வி. பரசுராமன், ஏ. கே. குமாரவேலன், சி. என். ஜானகிராமன் ஆகியோர் பேசினர்.

சென்னை-வண்ணை அண்ணா படிப்பகம்

12-8-56-ல், சென்னை-வண்ணை சோலையப்பன் தெருவில், மேற்படி படிப்பகம் ஆரம்பிக்கப்பட்டு நிர்வாக உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செப்டம்பர் திங்கள் இரண்டாவது வாரத்தில் படிப்பகத் திறப்பு விழா நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

பம்பாய் முதன் மந்திரி உண்ணுவிரதம்

தான் கூறுவதைக் கேட்கும்வரை மேற்கொள்ளப்போவதாக அறிவிப்பு

இருமொழி மாநில அமைப்பு கிளப்பியுள்ள நெருக்கடி

அகமதாபாத், ஆக. 20— பம்பாய் முதன் மந்திரி மொரார்ஜி தேசாய் நேற்று இரவு முதல் உண்ணுவிரதம் மேற்கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

குசராத் பிரதேச காங்கிரஸ் கூட்டத்திற்குப் பிறகு அவர் இந்த முடிவை அறிவித்திருக்கிறார்.

"இருமொழி பம்பாய் மாநில அமைப்பு குறித்து நான் கூறுவதை அகமதாபாத் மக்கள் அமைதியாகக் கேட்கும்வரை நான் உணவேதும் உட்கொள்ள மாட்டேன்."

என்று, அவர் கூறியிருக்கிறாராம்.

காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திற்குப் பிறகு அவர், ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுவதென ஏற்பாடாகியிருந்தது.

ஆனால், மக்கள் தங்களுக்குத் தாங்களாகவே விதித்துக் கொண்டுள்ள ஊரடங்குச் சட்டத்தினால், எவரும் கூட்டத்திற்குச் செல்லக்கூடாதென மகா குஜராத் சமிதி கேட்டுக் கொண்டிருந்தது; அதன்படி மொரார்ஜி கூட்டத்திற்கு எவரும் செல்லவில்லையாம்!

இதனால் மனமுடைந்த மொரார்ஜி தேசாய், உண்ணுவிரதம் மேற்கொண்டிருக்கிறாராம்.

"உண்ணுவிரதங்களில் எனக்கு நம்பிக்கை இல்லை என்பது உங்களுக்குத் தெரியும்; ஆனால் இன்று குஜராத் தன்னைத்தானே அழித்துக் கொள்வதை நான் காண்கிறேன்; எனவே, குசராத் அழியும் முன்பே தான் செத்துப்போய் விடுவது நல்லது"

என்று அவர் கூறியிருக்கிறாராம்.

தானும் நேருவும் இதுபோன்ற ஒரு நடவடிக்கையை மொரார்ஜி மேற்கொள்ளக் கூடாதென்று தடுத்தும் அவர் கேட்கவில்லை என தேபர் கூறியிருக்கிறார்.

குஜராத்தில் கடந்த 10 நாட்களாக நடைபெற்றுவரும் சம்பவங்கள் அவரை மிகவும் வருத்தியுள்ளன என்றும் தேபர் கூறினாராம்.

விமானப் போக்குவரத்துத் தொழிலாளர் வேலைநிறுத்தம்

★

கராச்சி, ஆக. 18— தங்களுக்குத் தரப்படும் ஊதியத்தை மேலும் உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கை நிறைவேற்றப்படாதிருக்கும்வரையில் தாங்கள் வேலை நிறுத்தம் செய்ய இருப்பதாகக் கூறி, இந்தியன் ஏர் லைன்ஸ் கார்ப்பரேஷனைச் சேர்ந்த கராச்சி கிளையில் இருக்கும் பாகிஸ்தானி ஊழியர்கள் அறிக்கை விடுத்திருக்கின்றனராம்.

இந்நிறுவனத்திலுள்ள பாகிஸ்தானி ஊழியர்கள் மொத்தம் 120 பேராம்; அவர்கள் நிர்வாகத்துறைப் பிரிவிலும், எஞ்சினீயரிங் பிரிவிலும் வேலைசெய்து வருகின்றனராம்.

5 மாணவர்கள் உண்ணுவிரதம்

இருமொழி பம்பாய் அமைப்பை எதிர்த்து நடவடிக்கை

ராஜ்கோட், ஆக. 18— இருமொழி பம்பாய் மாநில அமைப்பிற்கு எதிராக உம்ராலாவைச் சேர்ந்த 5 மாணவர்கள் உண்ணுவிரதம் தொடங்கி இருப்பதாகத் தெரிய வருகிறது.

இந்த மாணவர்கள், 'தாலுகா காங்கிரஸ் செயலாளரும், நகரசபைத் தலைவரும் பதவியிலிருந்து விலக வேண்டும்' என்று கோருகின்றனராம்.

மாணவர்களின் கோரிக்கைகளை ஆதரித்து, ஒரு நகரசபை உறுப்பினரும் தமது பதவியை இராஜினாமாச் செய்திருக்கிறாராம்.

பற்றுக்குறைநிதி அமைப்பு முறை காரணமல்லவாம்!

புதுடில்லி, ஆக. 17— "அன்றாட உபயோக உணவுப் பொருள்களின் விலைகள், கடந்த மார்ச் மாதத்திலிருந்து அதிகரித்ததற்குப் பற்றுக்குறை நிதி அமைப்பு முறை காரணமல்ல"

என்று, மக்கள் சபையில், ரெவினியூ-சிவில் செலவின அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

"விலைவாசிகள் ஒரு நிலைக்கு வருமாறு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?" என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர், 'விலைவாசிகள் ஒரு கட்டுப்பாட்டுக்குள் இருந்தே தீரவேண்டும்; விலைகளை ஒரு நிலைப்படுத்த சர்க்கார் எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகளை விளக்கும் விவரமான அறிக்கை விரைவில் வெளியிடப்படும்" என்றார்.

தீவிரமாகக் கவனிப்பார்களாம்!

சென்னை, ஆக. 18— "பிச்சை எடுக்குமாறு குழந்தைகளைத் தூண்டிவிட்டு அவர்களைப் பிச்சைக்கு அனுப்பிவிட்டுப் பின்னர், அவர்கள் பிச்சையெடுத்து விட்டுத் திரும்பினதும் அவர்களுக்குக் கிடைத்ததில் ஒரு பகுதியைக் கொடுத்துவிட்டு மீதியைத் தாங்களே எடுத்துக் கொள்ளும் 'ஆசாமிகள் பலர் இருக்கின்றனர். இப்பிரச்சினைகளைத் தவிர்க்கவும், அதற்கான தேவையான நடவடிக்கைகள் எடுப்பதையும் சர்க்கார் தீவிரமாகக் கவனிக்கும்,"

என்று, அமைச்சர் சுப்பிரமணியம் சட்டசபையில் கூறியிருக்கிறார்.

அனுமந்தையாவின் பதவி பறிக்கப்பட்டதற்குக் காரணம்?

விரட்டியவர்கள் நிலை பற்றி விளக்கம்

மைசூர், ஆக. 19— "கர்நாடக மக்கள் அனைவரும் ஒரே மாநிலத்தில் இணைந்து வாழவேண்டும் என்று நான் கொண்ட கொள்கைக்காக முதன் மந்திரி பதவியை என்னிடமிருந்து பறித்து விட்டார்கள்,"

என்று, மைசூர் மாநில முன்னாள் முதலமைச்சர் அனுமந்தையா கூறி வருத்தப்பட்டுக் கொண்டாராம்.

"மாநில புது அமைப்பின் விளைவாகப் பலியாவதில் நான்தான் முதலாமவன்"

என்றும் அவர் கூறியுள்ளார்.

"1954-ம் ஆண்டில், என்மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் கையொப்பமிட்டவர்களும், கர்நாடக மாநில அமைப்பை எதிர்த்தவர்களும் தான் இன்று என்னை விரட்டியவர்கள்,"

என்றும் அவர் பத்திரிகையாளரிடம் கூறியிருக்கிறார்.

"என்மீதுஎனது எதிரிகளோ, காங்கிரஸ் மேலிடமோ எந்த விதக் குற்றச்சாட்டும்சுமத்தவில்லை,"

என்றும் அவர் கூறியிருக்கிறார்.

புலிக்குத் தப்பினர்; ஆனால் வெள்ளத்திற்கு பலியாகிவிட்டனர்!

மிர்சாபூர் மாவட்டத்திலுள்ள சோபான் எனும் கிராமத்தைச் சேர்ந்த 9 பேர், தங்களைத் தாக்க வந்த புலி ஒன்றிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காக, நதியோரமாக நின்றுகொண்டிருந்த மரம் ஒன்றின்மீதேறி அதன் உச்சாணிக் கொம்பில் தொத்திக்கொண்டனராம். புலிவாயினின்றும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்குத் தகுந்த பாதுகாப்புக் கிடைத்ததே என்று அவர்கள் மன ஆறுதல் கொண்டிருந்த நேரத்தில், திடீரென ஆற்றில் பெருவெள்ளம் ஏற்பட்டது; பெரு வெள்ளத்தின் வேகம் அருகில் நின்ற மரத்தை வேரோடு சாய்த்து ஆற்றுக்குள் தள்ளியது. பாவம்! புலியின் வாயிலிருந்து தப்பிய அவர்கள் சாய்ந்த அந்த மரத்துடன் வெள்ளத்தில் இழுத்துச் செல்லப்பட்டுவிட்டனர்.

'புத்த ஜெயந்தி'க்குக் கண்டனம்?

நடவடிக்கை எடுப்பது குறித்து ஆலோசனையாம்!

லக்னோ, ஆக. 15— உத்திரப் பிரதேச (மேல்) சட்டசபைக் கூட்டத்தில், உறுப்பினர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளித்துப் பேசிய உ. பி. நிதியமைச்சர், 'கடந்த மே மாதத்தில் பருகாபாத்தில் நடைபெற்ற 'முஸ்லிம் ஜமயத்' மாநாடு ஒன்றில், இனத்துவேஷமாகப் பேசின சிலர்மீது தகுந்த நடவடிக்கைகள் எடுப்பது குறித்து சர்க்கார் இன்னும் ஆலோசித்துக்கொண்டிருக்கிறது' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அம்மாநாட்டில், புத்தஜெயந்தி கொண்டாடுவதை எதிர்த்தும் கூடச் சில கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன என்றும், எனினும் கௌதம புத்தருக்கு விரோதமாக விரும்பத்தகாத எதுவும் பேசப்படவில்லை என்றும் அவர் கூறியிருக்கிறார்.

பில்பித் எனும் இடத்தில் உள்ள சில முஸ்லிம் பள்ளிகளில், இனத்துவேஷ முறையில் சில சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்ததாகவும், ஆனால் அவைகளை யார் ஒட்டினது என்பதற்கான அறிகுறிகள் ஏதும் கிடைக்காததால் அவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை என்றும், அந்தச் சுவரொட்டிகள் அனைத்தும் மிகவும் கண்டனத்திற்கு உரியவைகளாக இருந்ததால், அவற்றில் அடங்கியுள்ளவைகளைப் படிக்கத் தமக்கு விருப்பமில்லை என்றும் கூறியிருக்கிறார்.

முன்னாள் நேபாள மந்திரிக்கு அபராதம்

அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்தாராம்

காட்மண்டு, ஆக. 18— தனக்குத் தரப்பட்டிருந்த மந்திரி பதவியின் அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்த குற்றத்திற்காக நாரதமுனி துலாங் என்ற நேபாள முன்னாள் தற்காப்பு இலாகா மந்திரிக்கு உயர்நீதி மன்றம் ரூ. 2 அபராதம் விதித்திருப்பதாகத் தெரியவருகிறது.

துலங், வெளிவிவகார இலாகா பொறுப்பினையும் சிலகாலம் கவனித்து வந்ததாயும், அந்தக் காலத்தில் இலஞ்சம் வாங்கியதாகவும் அதிகாரி ஒருவர் குற்றம் சாட்டியிருந்தார்.

ச. வேதநாயகம் பிள்ளை நினைவு நாள்

மாயூரம் நீதிபதி ச. வேதநாயகம் பிள்ளை நினைவு நாள் விழா 21—8—56 மாலை 6-30 மணிக்கு, சென்னை—இராயபுரம் இலக்கிய மன்றச் சார்பில், பனைமரத்தொட்டி அம்மன்கோயில் எதிரில், புலவர் சு. நெல்லையப்பர் தலைமையில் நடைபெறும். தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களும், தோழர்கள் சி. பி. சிற்றரசு, ம. இராசமாணிக்கம், தியாகராசன், பி. வீரராகவன், எஸ் ஏ.ஏ. அண்ணாமலை ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்; திருமதி கே. சண்பகவல்லி வேதநாயகர் பாடல்களைப் பாடுவார்.

2,770 ஓராசிரியர்பள்ளி...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

விக்கப்பட்டிருக்கிறது.

மேலும், இத்திட்டத்திற்குப் பின்னர், முன் வருடத்தில் மாநிலத்திலுள்ள இடைநிலைக் கல்விகளின் எண்ணிக்கையான 1,101-ஐவிட இந்த ஆண்டில் (1954—55ல்) 20 பள்ளிகள் அதிகமாகத் தோன்றியுள்ளனவாம்.

'1954 - 55-ம் ஆண்டிலிருந்து (பள்ளி ஆண்டு) 4 முதல் 6-வது படிவம் வரைக்கும், முதல் மொழிப் பயிற்சியின் இரண்டாவது பகுதியாக இந்தி மொழி பயில வேண்டுமென்று விதி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது,' என்றும் அவ்வறிக்கையில் காணக் கிடக்கிறது.

மாநிலத்திலுள்ள ஆண்கள் கலைக் கல்லூரிகளின் எண்ணிக்கை 39-லிருந்து 40 ஆகவும், பெண்கள் கலைக் கல்லூரிகளின் எண்ணிக்கை 14-லிலிருந்து 16 ஆகவும், மதுரையில் அண்மையில் புதிதாக ஒரு மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதையொட்டி, இப்போது மாநிலத்திலுள்ள மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை ஐந்தாகவும் உயர்ந்துள்ளனவாம். மேலும், இந்த ஆண்டில், ஒரு கலை—கைத்தொழில் பள்ளியும் திறக்கப்பட்டிருக்கிறது.

மேலும், சர்க்கார்; திருத்தியமைக்கப்பட்ட சமூகக் கல்வித் திட்டமான முதியோர் கல்வித் திட்டத்தைத் தேசிய விரிவுபடுத்தும் திட்டத்துடன் சேர்த்து, இந்த ஆண்டின் இறுதிவரையில் 806 முதியோர் கல்விச் சாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இப்பள்ளிகளில் 8863 முதியோர் கல்வி கற்றிருக்கின்றனராம்.

புத்தக நிலையங்கள், படிப்பகங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையும், கடந்த வருடத்தின் எண்ணிக்கையான 2,300-லிருந்து 2,566 ஆக உயர்ந்துள்ளது.

சென்னை நகர மாணவர்களுக்கு

"சென்னை நகர தி. மு. கழக மாணவர் கிளை கமிட்டிக் கூட்டம் சென்னை இராயபுரம், 'அறிவகத்தில், 21-8-56 காலை 10 மணிக்கு நடைபெறும்; அதுபோது, 5-8-56ல் நடைபெற்ற 'தேர்தல் நிதி அளிப்பு விழா' கூட்ட வரவு-செலவுகணக்கு, மற்றும் இதர பிரச்சினைகள் பரிசீலிக்கப்படும்.

"கூட்டத்திற்கு, தி. மு. க.—மாணவர் கிளையின்பால் அக்கறை கொண்ட எல்லா மாணவர்களையும் கலந்து கொள்ள வேண்டுகின்றேன்.

"சென்னை நகரிலுள்ள கல்லூரி—பள்ளிகளின் பிரதிநிதிகள் சென்னை நகரைச் சார்ந்த கிளைக் கழகங்களின் நிர்வாகிகள், சென்னை நகரிலுள்ள அமைப்புக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் அனைவரும் இதனையே அழைப்பாகக்கொண்டு பங்கு கொள்ள பணிவுடன் அழைக்கின்றேன்."

என்று, தி மு. க.—மாணவர் கிளை அமைப்பாளர், டி. கே. பொன்னுவேலு அவர்கள் அறிவிக்கிறார்

காவியக் கலை அரங்கம் சொற்பயிற்சிக் கூட்டம்

21—8-56 மாலை 6—மணியளவில் சென்னை—இராயபுரம், 'மலர் அகத்தில்,' காவியக் கலை அரங்க சொற்பயிற்சிக் கூட்டம் தோழர் எஸ். எஸ். பி. லிங்கம் தலைமையில் நடைபெறும் தோழர்கள் வே. கபிலன், என் வி. மதிவண்ணன், டி. பி. எஸ். மணி, ஜி எஸ். வாசன் ஆகியோர் 'கலை உலகில் புரட்சி' எனும் தலைப்பில் பேசுவர்.

சென்னை 35-வது வட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்

22—8—56 இரவு 8 மணிக்கு வெள்ளாளத் தெரு (புலியூர்) எண் 6/1 இல்லத்தில், மேற்படி கூட்டம் நடைபெறும். அதுபோது, ஆண்டு விழாக் கூட்டம் நடத்தல்; கிளைக் கழகப் பணிமனை நிர்மாணித்தல்; வரவு-செலவு கணக்குப் பரிசீலனை ஆகியவை ஆய்வுக்குவரும்.

1,10,000 கையெழுத்து...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

உலவ அனுமதிக்கப்பட்டிருக்கின்றன.

ரிக்ஷாக்கள், டோங்காக்கள், கைவண்டிகள், வாடகைக் கார்கள் எவையுமே ஓடவில்லை என்றும் கூறப்படுகிறது.

காலையில் புறப்பட்ட நகரசபை பஸ் வண்டிகள்கூட திரும்பவும் புறப்பட்ட இடத்திற்கே வந்து சேர்ந்துவிட்டனவாம். காரணம், அவற்றில் ஏறுவதற்குப் பிரயாணிகள் இருக்கவில்லையாம்.

கையெழுத்துக்களுடன் செல்லுகின்றனர்!

மகாகுசராத் சமிதியைச் சேர்ந்த மார்க்கண்ட சாஸ்திரி என்ற ஊழியர், குசராத்தின் பல்வேறு பாகங்களிலிருந்தும் இருமொழி பம்பாய் மாநில அமைப்பிற்கு எதிராக வாங்கப்பட்ட 1,10,000 கையெழுத்துக்களுடன், டில்லி சென்றிருப்பதாகத் தெரியவருகிறது.

இவர், அந்தக் கையெழுத்துக்களடங்கிய மகஜரை, மாநிலங்கள் சபைத் தலைவரிடம் தருவார் என்று கூறப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.